# கேழ்வரகு சாகுபடி தொழில்நுட்பங்கள்

**நாற்றாங்கால் தயாரிப்பு**

ஒரு எக்டர் பயிரிட 12.5 சென்ட் (500 செ.மீ) நாற்றங்கால் தேவை. நல்ல செழிப்பான நிலத்தை உழுது, கடைசி உழவில் அடிஉரமாக 500 கிலோ தொழுஉரம் மற்றும் 37.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் கலந்து இடவேண்டும். நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை இரும்பு கலப்பை அல்லது ஐந்து முறை நாட்டு கலப்பைக் கொண்டு நன்றாக உழவேண்டும். பாத்திகள் 3 மீ x 1.5 மீ என்ற அளவில் அமைத்து 30 செமீ இடைவெளியில் 15 செ.மீ ஆழத்திற்கு வாய்க்கால் அமைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.

**விதையும் விதைப்பும்**

விதையளவு : எக்டருக்கு 5 கிலோ

விதை நேர்த்தி : ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பென்டாசிம் கலந்து விதைக்கவும். 3 பாக் அசோஸ்பைரில்லம் மற்றும் 3 பாக் பாஸ்போபாக்டீரியா அல்லது (1200 கி/ஹெ) அசோஸ்பாஸ் உடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**நாற்றங்கால் விதைப்பு**

1 செ.மீ அளவிற்கு விரல்களை கொண்டு கோடு கிழித்து அதில் விதைகளை சீராக விதைக்க வேண்டும். இதற்கு சுமார் 5 கிலோ அளவு விதையை பயன்படுத்தவேண்டும். விதைத்தவுடன் 500 கிலோ தொழுஉரத்தைக் கொண்டு நன்றாக மூடி விடவேண்டும். விதைகளை ஆழமாக விதைக்க கூடாது.

**நீர் நிர்வாகம்** : 30 செமீ அளவு வாய்க்கால் மூலம் நீர்பாய்ச்சி உயர் நாற்றாங்கால் பாத்திகள் முழுமையாக நனையும் படி நீர்பாய்ச்ச வேண்டும்.

**நீர் நிர்வாகம்**

| நீர் எண்ணிக்கை | செம்மண் | களிமண் |
|---|---|---|
| முதல் நீர் | 3ம் நாள் | 4ம் நாள் |
| மூன்று | 7ம் நாள் | 9ம் நாள் |
| நான்கு | 12ம் நாள் | 16ம் நாள் |
| ஐந்து | 17ம் நாள் | --- |

**இடைவெளி** : 17 முதல் 20 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை 30 x 10 செ.மீ இடைவெளியில் நடவேண்டும். நேரடி விதைப்பில் 22.5 x 10 செ.மீ இடைவெளியில் விதைக்க வேண்டும். 5 பாக் (1000 கிராம்/ஹெ)

அசோஸ்பைரில்லம் மற்றும் 5 பாக் (1000 கிராம்/ஹெ) பாஸ்போபாக்டீரியா அல்லது 10 பாக் அசோபாஸ் (2000 கிராம்/ஹெ) 40 லிட்டர் தண்ணீர் மற்றும் அரிசி கஞ்சியுடன் கலந்து நாற்றுக்களின் வேர்பாகத்தினை 15-30 நிமிடங்கள் நனைத்து நட வேண்டும்.

**நாற்று நடவு** : சுமார் 17 முதல் 20 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை பிடுங்கி நடவு வயலில் முதலில் நீர் பாய்ச்சி பிறகு நட வேண்டும்.

**களை நிர்வாகம்** : பூட்டாகுளோபார் 2.5 லிட்டர் அல்லது பெண்டிமெத்தலின் 2.5 லிட்டர் என்ற களைக்கொல்லியை ஒரு எக்டரில் விதைத்த 3ம் நாளில் கைத் தெளிப்பானால் தெளிக்கவும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை**

**உரமும் உரமிடுதலும்** : அடியுரமாக எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் இடவேண்டும். 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் (2000 கிராம்/ஹெ) மற்றும் 10 பாக்கெட் (2000 கிராம்/ஹெ) பாஸ்பரசை கரைத்து தரக்கூடிய பாக்டீரியா மற்றும் 20 பாக் அசோபாஸ் கரைத்து தரக்கூடிய பாக்டீரியா மற்றும் 20 பாக்கெட் அசோபாஸ் (400 கிராம்/ஹெ) 25 கிலோ மணல் மற்றும் 25 கிலோ தொழு உரம் கலந்து நடுவு வயலில் இடவேண்டும். கீழ்கண்ட இரசாயன உரங்களையும் இடவேண்டும்.

| பயிர் | இடும் முறை | ஒரு எக்டருக்கு இடவேண்டிய சத்துக்கள் (கிலோ) | | | இப்கோ காம்ப்ளக்ஸ் 10 23 26, யூரியா இட வேண்டிய அளவு (கிலோ) | |
|---|---|---|---|---|---|---|
| | | **தழைச்சத்து** | **மணிச்சத்து** | **சாம்பல்சத்து** | **10:26:26** | **யூரியா** |
| கேழ்வரகு | அடியுரம் | 30 | 30 | 30 | 116 | 40 |
| | மேலுரம் | 30 | - | 3 | 3 | 66 |

**நீர் நிர்வாகம்**

நடும் பொழுதும் பின்னர் வாரம் ஒரு முறையும் நிலம் மற்றும் சூழ்நிலைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அறுவடைக்கு 10 நாட்கள் முன்பே நீர் பாய்ச்சுவதை நிறுத்திட வேண்டும்.

**அறுவடை**

1. எப்பொழுது அறுவடை செய்யலாம் என தீர்மானிக்கவும்.
2. கேழ்வரகு ஒரே சமயத்தில் முதிர்ச்சி பெறாத காரணத்தினால் இருமுறை அறுவடை செய்ய வேண்டும்

3. தாய்ச் செடியில் உள்ள கதிர்களும் 50 சதம் இதர கதிர்களும பழுப்பு நிறமாக மாறியவுடன் முதல் அறுவடை செய்யலாம்.

**முதல் அறுவடை**

- பழுப்பு நிறமாக மாறிய அனைத்து கதிர்களையும் அறுவடை செய்யவும்
- காய வைத்து தானியங்களைப் பிரித்து தூற்றி சுத்தம் செய்யவும்.

**இரண்டாம் அறுவடை**

- முதல் அறுவடைக்கு ஏழு நாட்கள் கழித்து பச்சைக் கதிர்களையும் சேர்த்து அறுவடை செய்யவும்.
- கதிர்களை ஒருநாள் நிழலில் மூட்டம் போட்டு பதப்படுத்தவும். இதனால் வெப்ப நிலை அதிகரிப்பதால் கதிர்கள் சீராக முதிர்ச்சி பெறும். பின்னர் மூட்டை பிடித்து சேமிக்கவும்